

கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் அண்மையில் மறைந்த கரிசல் இலக்கிய முன்னோடி நவீன தமிழிலக்கிய ஆளுமை பூமணி அவர்களின் இல்லத்திற்குச் சென்று அஞ்சலி செலுத்தி, அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.



புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் திருமயம் சட்டமன்றத் தொகுதியில் திருமயம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தை முன்னாள் அமைச்சர் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளர், திருமயம் சட்டமன்ற உறுப்பினர் என்.ரகுபதி திறந்து வைத்தார். உடன் ஒன்றிய கழக செயலாளர்கள் அழகு சிதம்பரம், ஆர்.கணேசன், பொன்.ராமலிங்கம், வி.ஆர்.இளையராஜா, முன்னாள் ஒன்றிய கழக செயலாளர் எம்.பி.சரவணன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### இறையன்பன் குத்தூஸ் நிகழ்ச்சித் தொகுப்பு – பொள்ளாச்சி மா.உமாபதி வரவேற்புரை!

# தி.மு.க. கலை - இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை சார்பில் மறைமலை அடிகள் 150வது பிறந்தநாள் நிறைவுப் பெருவிழா!

## முனைவர் ம.இராசேந்திரன் – க.திருநாவுக்கரசு – பேராசிரியர் ஆ.இரா.வேங்கடாசலபதி – வாகை சந்திரசேகர் – நே.சிற்றரசு – போஸ், வெங்கட் – எம்.ஆர்.ஆர்.வாசுவிக்ரம் சிறப்புரை!

சென்னை, ஜூலை 18-

தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை சார்பில் தனித்தமிழ் இயக்கத் தந்தை மறைமலை அடிகள் அவர்களின் 150வது பிறந்தநாள் நிறைவுப் பெருவிழா இன்று (18.7.2026, சனிக்கிழமை) மாலை 5 மணியளவில் ஹோட்டல் ஜாக், நெ.1, போரூர் சோமசுந்தரம் சாலை, தியாகராயர் நகரில் நடைபெறுகிறது.

பேரவை செயலாளர் கலைமாமணி இறையன்பன் குத்தூஸ் நிகழ்ச்சியை தொகுத்து வழங்குகிறார். பேரவைச் செயலாளர் பொள்ளாச்சி மா.உமாபதி வரவேற்புரையாற்றுகிறார். பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர் தலைமையுரையாற்றுகிறார்.

சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, பேரவைத் துணைத் தலைவர்கள் கலைமாமணி போஸ் வெங்கட், எம்.ஆர்.ஆர். வாசு விக்ரம், ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதிச் செயலாளர் மா.பா. அன்புதுரை, ஆயிரம் விளக்கு மேற்குப் பகுதிச் செயலாளர் வினோத் வேலாயுதம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் மா.இராசேந்திரன், திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு, வரலாற்று ஆராய்ச்சியாளர் பேராசிரியர் ஆ.இரா.வேங்கடாசலபதி ஆகியோர் மறைமலை அடிகள் அவர்களின் படத்தை திறந்து வைத்து சிறப்புரையாற்றுகிறார்கள்.

பேரவை துணைச் செயலாளர் எம்.எஸ்.ஹரி பாபு, சென்னை தென்மேற்கு மாவட்ட பேரவை அமைப்பாளர் திருமலை பொன்னுரங்கம் ஆகியோர் நன்றி கூறுகிறார்கள்.

இவ்விழாவிற்கு வருகை தந்து சிறப்பிக்குமாறு பேரவைத் துணைச் செயலாளர்கள் வண்ணை அரங்கநாதன், என்.தில்லை செல்வம், நன்மாறன், எழில்மாறன் செல்வேந்திரன், சி.கோபி, கலைமாமணி அ.ஜாகீர் உசேன் ஆகியோர் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

### சேலம் மாவட்டம் – கெங்கவல்லி – ஒதியத்தூரில்

# டாக்டர் அம்பேத்கர் சிலையை திறக்காவிடில் போராட்டத்தை முன்னெடுப்போம்!

## ஆதித் தமிழர் கட்சி கண்டன அறிக்கை!

சேலம், ஜூலை 18 -

ஆதித் தமிழர் கட்சியின் நிறுவனத் தலைவர் கு.ஜக்கையன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

சேலம் மாவட்டம் கெங்கவல்லி ஒதியத்தூர் தலித் மக்கள் குடியிருப்புகள் உள்ள இடத்தில் புரட்சி யாளர் அம்பேத்கர் சிலையை மாவட்ட ஆட்சியரின் அனுமதியோடு திறந்து வைக்கப்பட்டது. ஆனால் காவல்துறை அதிகாரிகள் யாருடைய தூண்டுதலின் பேரில் சிலையை உடனே தகரம் கொண்டு அடைத்து வைத்தனர்.

சிலையை ஏன் மூடுகிறீர்கள் உடனே திறக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்ட அந்த கிராமத்தில் உள்ள தலித் மக்களை காவல்துறை கொடுரமான முறையில் தாக்குதல் நடத்தியுள்ளது இதனை ஆதித்தமிழர் கட்சி மிகவும் வன்மையாக கண்டிக்கிறோம்.

இந்தியா முழுவதும் அதிகமான சிலைகள் உள்ளன ஏனென்றால் ஒடுக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட பட்டியல் பழங்குடியினர் இன மக்களின் ஒட்டுமொத்த மனிதர்களுக்குமான உரிமைகளை நிலைநாட்டிய தலைவர் அம்பேத்கரின் சிலை தமிழ்நாட்டில் நிறைய உள்ளன ஆனால் இங்கு அம்பேத்கர் கால் மேல் கால் போட்டு அமர்ந்து இருக்கிறது என்று தடுத்துள்ளனர்.

இந்திய அரசியல் சட்டத்தை ஏழுதிய அரசியல் ஆசான் டாக்டர் அம்பேத்கர் அவர்களை கொள்கை தலைவராக ஏற்றுக் கொண்டதாக சொல்லும் தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் தமிழ்நாடு முதல்வர் ஜோசப் விஜய் அவர்கள் இதற்கு வாயை திறந்து பேச வேண்டும். மேலும் தனது கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் காவல்துறையை ஏன் அவர் கண்டிக்கவில்லை?.

உடனடியாக அம்பேத்கர் சிலையை திறக்க வேண்டும். இல்லையேல் சணநாயக சக்திகளை இணைத்து கொண்டு ஆதித்தமிழர் கட்சி போராட்டத்தை முன்னெடுக்கும் ஏன்பதை ஆதித்தமிழர் கட்சி தலைமை குழு சார்பில் தெரிவித்து கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



சுதந்திர போராட்ட வீரர் மாவீரன் பொல்லான் அவர்களின் 221 வது நினைவுநாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் மாவட்டக் கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான சு.முத்துசாமி பொல்லான் நினைவிடத்தில் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். நிகழ்வில் கழக துணை பொதுசெயலாளர் அந்தியூர் ப.செல்வராசு, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.எஸ். குமாரசாமி, கழக மாணவரணி செயலாளர் வீரமணி ஜெயக்குமார், மாவட்ட துணை செயலாளர் ஆ.செந்தில்குமார், துணை மேயர் வி.செல்வராஜ், ஒன்றிய கழக செயலாளர்கள் சு. குணசேகரன், விஜயகுமார், கதிர்வேல், தோப்பு சதாசிவம், பொ.ராமசந்திரன் சுள்ளான் எஸ்.ராஜேந்திரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### புதிய தலைமுறை தொலைக்காட்சி முதுநிலை ஆசிரியர் விஜயனுக்கு சம்மன் அனுப்பி அராஜகம்!

# த.வெ.க. அரசின் ஊடக சுதந்திரத்தை நசுக்கும் செயல்!

## சென்னை பத்திரிகையாளர் சங்கம் கண்டனம்!

சென்னை, ஜூலை 18-

சென்னை பத்திரிகையாளர் சங்கத் தலைவர் வி.செல்வின் வினோத்குமார், பொதுச் செயலாளர் பி.கோபி ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

புதிய தலைமுறை தொலைக்காட்சி முதுநிலை ஆசிரியர் விஜயனை அரசியல் வழக்கு தொடர்பாக காவல்துறையினர் சம்மன் அனுப்பி விசாரித்தனர். அவரும் நேற்று இரவில் 10 மணிக்கும், பின்னர் அழைத்தும் உரிய ஒத்துழைப்பு அளித்து ஆஜரானார்.

அதன் பிறகும் அவரது செல்போனைப் பறித்து வைத்துக்கொண்டு, இன்றும் தொடர்ச்சியாக அவரிடம் விசாரணை நடத்தி அசாதாரண சூழலை ஏற்படுத்துகின்றனர்.

வழக்கின் தன்மைக்குள் நாம் செல்லவில்லை என்றாலும், பொதுவெளியில் ஊடகப் பணியில் இருக்கும் ஒருவர், அந்த வழக்கில் தொடர்புடையதாகக் கூறப்படும் எவரிடமும் செய்தி தொடர்பாகப் பேசியிருந்தால், அதுவே குற்றம் என்பதைப்போல காவல்துறை அணுகுவது ஊடக சுதந்திரத்தை நசுக்கும் செயலாகும்.

அரசுக்கும் மக்களுக்கும் இடையில் உண்மைகளை உலகுக்குக் காட்டுவது தான், ஊடகத்தவரின் பணி என்பதை தமிழக அரசாங்கத்துக்கு சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது.

குறிப்பாக, காவல்துறை அமைச்சரான முதலமைச்சர் விஜய் இதில் உடனடியாகத் தலையிட்டு முதுநிலை ஆசிரியர் விஜயன் அவர்களை இயல்பான கடமைகளில் ஈடுபட ஆவன செய்யவேண்டும் என சென்னைப் பத்திரிகையாளர் சங்கம் வலியுறுத்துகிறது.

அண்மையில் முதலமைச்சர் பங்கேற்கும் நிகழ்ச்சிகளில் ஊடகத்தினர் தங்களின் செய்திக் கடமையைச் செய்வதற்கு இடையூறுகள் செய்யப்படுவதையும் முதலமைச்சரின் கவனத்துக்கு மீண்டும் கொண்டுவருகிறோம். ஊடக சுதந்திரத்தின் மீதான தாக்குதலை சென்னைப் பத்திரிகையாளார் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

இவ்வாறு அச்சங்கத்தின் தலைவர் வி.செல்வின், வினோத்குமார், பொதுச் செயலாளர் பி.கோபி ஆகியோர் அறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

### மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணியால்

# மாணவர்களின் கல்வித் தரம் பாதிக்கும்!

## பட்டதாரி ஆசிரியர்கள் குற்றச்சாட்டு!

கோவை, ஜூலை 18 -

கோவை மாவட்டத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027 பணிகள் நடக்க உள்ளது. இதில், முதற்கட்டமாக நேற்று முன்தினம் முதல் வரும் 31ம் தேதி வரை சுய கணக்கெடுப்பு நடக்கிறது. அதன் படி பொதுமக்கள் நேற்று முன்தினம் முதல் வரும் 31 ம் தேதி வரை se.census.gov.ins.gov.in என்ற இணையதளத்தின் வாயிலாக தங்களது குடும்ப விவரங் களை தாங்களாகவே பதிவு செய்ய வேண்டும். மேலும், வரும் ஆகஸ்ட் 1ம் தேதி முதல் 30ம் தேதி வரை கணக்கெடுப்பாளர்கள் மற்றும் மேற்பார்வைளர்கள் மூலம் வீடுகள் தோறும் வீடுகள் பட்டியலிடல் மற்றும் வீட்டு கணக்கெடுப்பு பணிகள் மேற்கொள்ளப் பட இருக்கிறது.

இந்த கணக்கெடுப்பு பணியில் அரசு பள்ளியின் ஆசிரியர்கள் அதிகளவில் ஈடுபட உள்ளனர். ஒரு நபருக்கு 200 வீடுகள் என ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த கணக்கெடுப்பு தொடர்பான பயிற்சிகளும் அவர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. இவர்கள், வரும் ஆகஸ்ட் 1ம் தேதி முதல் தங்களின் கணக்கெடுப்பு பணியில் ஈடுபட உள்ளனர். மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027க்கான விண்ணப்ப படிவங்களில் கட்டடம் மற்றும் வீட்டின் விவரங்கள், குடும்ப விவரங்கள், தண்ணீர், குடும்ப சொத்துகள் மற்றும் டிஜிட்டல் வசதிகள், மின்சாரம், கழிப்பறைகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்தும், பொது மக்களின் சுய விவரங்கள் குறித்த 34 கேள்விகள் இடம் பெற்றுள்ளது.

இந்த தகவலை ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் சேகரிக்க உள்ளனர். இந்த கணக்கெடுப்பு பணியில் தொடக்க, நடுநிலைப் பள்ளி ஆசியர்கள் அனைவரும் ஈடுபடுத்தப்பட்டு இருப்பதாகவும், மேல்நிலைப்பள்ளிகளைச் சேர்ந்த பட்டதாரி ஆசிரியர்கள், முதுநிலை பட்டதாரி ஆசிரி யர்கள் பலர் பணியமர்த்தப்பட்டு இருப்பதாகவும், இதன் காரணமாக மாணவர்களின் கல்வி பணி கடுமையாக பாதிக்கப்படும் எனவும் ஆசிரியர்கள் தரப்பில் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து பட்டதாரி, முதுநிலை ஆசிரியர்கள் கூறியதாவது : 10ம் வகுப்பு. பிளஸ்2 மாணவர்களுக்கான குறிப்பிட்ட காலத்தில் பாடத்திட்டங்களை முடிக்க ஏற்கனவே போதிய நேரம் கிடைப்பதில்லை. மக்கள் கணக்கெடுப்பு பணியின் போது ஆசிரியர்கள் பள்ளி முடித்து விட்டு மாலையில் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் சென்று பணியை மேற்கொள்ள அறிவுறுத்தி உள்ளனர். இப்படி பணி செய்யும் போது இரவு 9 மணி வரை நீடிக்க வாய்ப்பு இருக்கிறது.

இதனால், மறு நாள் மீண்டும் பள்ளிக்கு சென்று மாணவர்களுக்கு முறையாக கல்வி அளிப்பதில் சிக்கல் இருக்கிறது. இதன் காரணமாக பொதுத்தேர்வு எழுதும் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படும் அபாயம் உள்ளது. தவிர, பெண் ஆசிரியர்கள் பணி முடிந்து இரவு வீடு செல்லும் நிலை இருப்பதால் அவர்கள் பல்வேறு சிக்கல்களை சந்திக்க வேண்டி இருக்கும்.

எனவே மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகளில் இருந்து 10,12ம் வகுப்புகள் ஆசிரியர்களை விடுவிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர், முதன்மை கல்வி அலுவலர் மற்றும் கல்வித் துறை இயக்குனர் என அனைவரிடமும் முறையிட்டோம். ஆனால், மக்கள் தொகை கணக்கெடுப்பு பணி மாநில அளவிலான பணி என்பதால், பணியை எளிமையாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், பணி சார்ந்த குறைகள் விரைவில் தீர்க்கப்படும் எனவும் அதிகாரிகள் தரப்பில் தெரிவித்துள்ளனர்.

கேரளாவிலும் மக்கள் தொகை கணக்கெடுப்பு பணி நடக்கிறது. அந்த அரசு கணக்கெடுப்பு பணியில் ஈடுபடும் நபர்கள் ஆன்டியூட்டியில் 10 நாள் விடுப்பு அல்லது 20 நாட்கள் அரைநாள் விடுப்பு எடுத்து பணியை முடிக்க கூறியுள்ளனர். இது போன்ற நடைமுறை ஆசிரியர்களையும் கணக்கெடுப்பில் ஈடுபடும் நபர்களையும் பெரிய அளவில் பாதிக்காது. தவிர, மாணவர்களின் கல்வியும் தொடர்பான எவ்வித பாதிக்காத வகையில் இருக்கும். ஆனால், தமிழக அரசு கணக்கெடுப்பு பணி தொடர்பான எவ்விதமான அறிவிப்புகளையும் வெளியிடாமல் உள்ளது.

ஆசிரியர்களை மட்டும் அனைத்து பணிகளிலும் இணைப்பதற்கு பதிலாக, இது போன்ற பணிக்கு மற்ற துறையை சேர்ந்தவர்களையும் ஈடுபடுத்த வேண்டும். ஆசிரியர்களின் பணி சுமையை குறைக்கவும், கல்வி பணி பாதிக்காத வகையிலும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் கூறினர்.



அரியலூர் மாவட்டம், தா.பழூர் மத்திய ஒன்றியம், இருகையூர் ஊராட்சி கோட்டியால் மற்றும் கூழாட்டுகுப்பம் கிராமத்திலிருந்து மாற்றுக் கட்சியினர் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை முன்னாள் அமைச்சர், அரியலூர் மாவட்ட கழக செயலாளர், குன்னம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.சிவசங்கர் முன்னிலையில் தங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். கழகத்தில் இணைந்த அனைவருக்கும் கழக இருவண்ண ஆடை அணிவித்து அனைவரையும் வரவேற்றார். இந்நிகழ்வில் தா.பழூர் மத்திய ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் இரா. அண்ணாதுரை, பொன்.செல்வம், ஏஜிஎஸ்.முருகன், ஒன்றிய துணை செயலாளர் நடராஜன், கார்த்தி மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.